கட்டாலங்குளம் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.ஏ.சங்கரஈஸ்வரி

ஊ.நி. மனைப்பிரிவு : 2/2023-2024 **நாள் : 12.02.2024**

பொருள் : மனைப்பிரிவு அனுமதி — தூத்துக்குடி மாவட்டம் - தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - கட்டாலங்குளம் ஊராட்சி கிராமம் சர்வே எண்கள்: 179/1B1, 179/1B2 ல் 9050.00ச.மீ (2.23ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவு மனை எண்கள் 01 முதல் 40 வரை மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்: 04.05.2017.

2. அரசாணை எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்: 29.11.2018.

3. தூத்துக்குடி மாவட்டம், நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: ROC No. P9R1T2M4/THOOTHUKUDI/TCP/202/202/TCP நாள்: 12.01.2024.

4. திரு. P. சாமுவேல் என்பவரது இணையதள விண்ணப்பம். P9R1T2M4 நாள்: 11.10.2023 மற்றும் ஊராட்சியில் விண்ணப்பம் அளித்த நாள்: 24.01.2024.

5. ஆவண எண்: 59/2024 நாள்: 04.01.2024.

6. ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 15 நாள்: 09.02.2024.

******

உத்தரவு:

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் கட்டாலங்குளம் ஊராட்சி, கிராமம் சர்வே எண்கள்: 179/1B1, 179/1B2 ல் 9050.00ச.மீ (2.23ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கும் பொருட்டு, பார்வை 3இல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் திட்ட அனுமதிக்கு ம.வ/தூமாஅ எண்: 07/2024 என எண்ணிடப்பட்டு, தூத்துக்குடி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள மனை எண்கள் 01 முதல் 40 வரை மனைப்பரிவு அனுமதி செய்திட கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1. கட்டாலங்குளம் ஊராட்சி, கட்டாலங்குளம் கிராமம் சர்வே எண்கள்: 179/1B1, 179/1B2 அமையப்பெற்ற மனை எண் 01 முதல் 40 வரை உள்ள மனைகளுக்கு கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ரூ.40000/- ரசீது எண்: 42466 நாள்: 12.02.2024ன் படி ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

2. புதுக்கோட்டை சார்பதிவாளர், இணைதள வழிகாட்டு மதிப்பின்படி மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகையில் 3% தொகையினை ரூ.9900/- நாள்: 09.02.2024 அன்று அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

3. மேலும் பார்வை (5) ன் படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலை மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான அசல் ஆவணங்கள் ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. உரிய கட்டணங்கள் அனைத்தும் மனுதாரரால் செலுத்தப்பட்டு விட்டதால் கட்டாலங்குளம் ஊராட்சி, கட்டாலங்குளம் கிராமம் சர்வே எண்கள்: 179/1B1, 179/1B2 ல் அமைந்துள்ள மனை எண்கள் 01 முதல் 40 வரை உள்ள குடியிருப்பு மனைகளுக்கு பார்வை (6) ல் கண்ட கட்டாலங்குளம் ஊராட்சி தீர்மானத்தின் படி மனைப்பரிவு அனுமதி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேற்படி மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

பார்வை 3இல் கண்ட செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனை/மனைகளுக்கு பொருந்தும்.

தலைவர்
கட்டாலங்குளம் ஊராட்சி
தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

திரு. P . சாமுவேல்,

3/182, மேற்கு தெரு, க.சாயர்புரம்,

கட்டாலங்குளம் ஊராட்சி, தூத்துக்குடி — 628 251.

நகல்

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள்
   தூத்துக்குடி மாவட்டம் .
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள்
   தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்.
3. சார்பதிவாளர் அவர்கள்
   புதுக்கோட்டை.
4. இருப்பு கோப்பிற்கு.